**குழித்துறை நகர்மன்றத்தின் 23-02-2023 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

**நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) மார்த்தாண்டத்தில் செயல்படும் MCC உரக்கிடங்கிற்கு மாறும் போது அந்த இடத்தில் வணிகவளாகம் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 416 - தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்**

1) நகர்மன்ற தலைவரின் அறை, ஆணையாளரின் அறை, பொறியாளர் அறை, அலுவலக அறை, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் கணினி வரி வசூல் மையம் ஆகியவற்றிலும், அலுவலகத்தின் வெளியில் வரும் பொதுமக்களுக்குத் தேவையான சுத்தமான குடிதண்ணீர் வைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 417(1) - தீர்மானிக்கப்பட்டது.

2) நகராட்சி அலுவலகத்தில் அலுவலகப் பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப்பிரிவு ஆகியவற்றில் கோப்புகளை வைத்து பராமரிப்பதற்கு தேவையான பீரோக்கள் வாங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 417(2) - தீர்மானிக்கப்பட்டது.

3) நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்கு வரும் போது பயன்படுத்தும் பழைய இருக்கைகளை மாற்றி புதிய இருக்கைகள் வாங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 417(3) - தீர்மானிக்கப்பட்டது.

4) காட்டுவிளை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சுற்றி பழுதடைந்துள்ள மதில் சுவரைக் கட்டியும், உட்புறத்தில் காங்கிரீட் தளம் அமைத்தும், நீர்த்தேக்கத் தொட்டியில் வர்ணம் பூசவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 417(4) - தீர்மானிக்கப்பட்டது.

6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.V. விஜு கொண்டு வரும் தீர்மானம்

1) வேலுத்தம்பி தளவாய் திடலில் GI PIPE-ல் அமைக்கப்பட்டுள்ள LED விளக்கை குழித்துறை தபால் நிலையம் முன் அமைந்துள்ள படிக்கட்டின் அருகில் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 418 - தீர்மானிக்கப்பட்டது.

10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G. ஜெயின்சாந்தி கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பிரிட்ஜ் வார்டில் (வார்டு எண்.10) நகர புல எண்.A10/50-ல் நகராட்சிக்கு சொந்தமான 18 சென்ட் இடத்தில் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தில் பூங்கா அமைக்க இந்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 419 - தீர்மானிக்கப்பட்டது.

17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A. அருள்ராஜ் கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் முபாரக் ஹோட்டல் பக்கம் உள்ள கழிவுநீர் ஓடையில் Toilet கழிவுகளை விடுவதை தடுக்கும் பொருட்டு நடைபாதையை அப்புறப்படுத்தி சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 420 - தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி பகுதியில் தமிழர்கள் பண்டிகையான போகி பண்டிகையை முன்னிட்டு பழைய பொருட்களை கழிக்கும் நிகழ்வு தொடர்ந்து நடந்து வருகிறது. இதில் பழைய கழிவுப் பொருட்களை தெருயோரங்களிலும் அல்லது கழிவுநீர் ஓடையிலும் போடாமல் தவிர்க்கவும் மற்றும் தங்கள் வீடுகளிலிருந்து அகற்றும் கழிவுகளை தெரு ஓரங்களிலோ அல்லது கழிவுநீர் கால்வாயிலோ கொட்டாமல் தினமும் வீடுவீடாக குப்பைகளை வாங்க வரும் தூய்மை பணியாளர்களிடமும், நகரில் அமைக்கப்பட்டுள்ள கழிவுகள் சேகரிப்பு மையங்களிலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நேரடியாக வழங்கவும் மற்றும் போகிப் பண்டிகையில் கழிவுகளை எரிப்பதை தவிர்த்து புகையில்லா போகி கொண்டாடும் வகையில் கழிவுகளை அதற்கென அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு மையங்களில் வழங்க தினசரி நாளிதழ் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு தினமலர் நாளிதழ் நிறுவனத்திலிருந்து ரூ.6048/- மற்றும் தினகரன் நாளிதழ் நிறுவனத்திலிருந்து ரூ.12,247/- செலவினப் பட்டியல் வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3767/2022/H1.

மன்றத்தீர்மான எண். 421 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் கட்டிடத்திலிருந்து கழிவுநீரினை, மழைநீர் வடிகாலில் விடுவதை தவிர்ப்பது மற்றும் பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை பொது இடங்களில் கொட்டுவதை தவிர்ப்பது தொடர்பான விளம்பரத்தினை மாலைமலர் தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.9,912/- மாலை மலர் நாள்தரிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3767/2022/H1.

மன்றத்தீர்மான எண். 422 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் தமிழர்கள் பண்டிகையான போகி பண்டிகையை முன்னிட்டு பழைய பொருட்களை கழிக்கும் நிகழ்வு தொடர்ந்து நடந்து வருகிறது. இதில் பழைய கழிவுப் பொருட்களை தெருயோரங்களிலும் அல்லது கழிவுநீர் ஒடையிலும் போடாமல் தவிர்க்கவும் மற்றும் தங்கள் வீடுகளிலிருந்து அகற்றும் கழிவுகளை தெரு ஒரங்களிலோ அல்லது கழிவுநீர் கால்வாயிலோ கொட்டாமல் தினமும் வீடுவீடாக குப்பைகளை வாங்க வரும் தூய்மை பணியாளர்களிடமும், நகரில் அமைக்கப்பட்டுள்ள கழிவுகள் சேகரிப்பு மையங்களிலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நேரடியாக வழங்கவும் மற்றும் போகிப் பண்டிகையில் கழிவுகளை எரிப்பதை தவிர்த்து புகையில்லா போகி கொண்டாடும் வகையில் கழிவுகளை அதற்கென அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு மையங்களில் வழங்க நாளிதழ் மூலம் விளம்பரம் ,செய்த வகைக்கு தினதந்தி தினசரி நாளிதழ் நிறுவனத்திலிருந்து ரூ.17,892/-க்கான செலவினப் பட்டியல் வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3767/2022/H1.

மன்றத்தீர்மான எண். 423 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 09-02-2023-ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

I. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண். A5

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | மாத வாடகை தொகை |
|---|---|---|---|
| 1 | கிளாட்சன்,<br>பெத்தேல் ஹவுஸ்,<br>மடிச்சல் அஞ்சல் | 50000/- | 5500/- |
| 2 | பிரசன்னகுமார்,<br>ஈத்தவிளை,மடிச்சல்அஞ்சல் | 50000/- | 5700/- |

II. கருங்கல் சாலைகடை எண். 34

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆர். பத்மகுமார்,<br>தோப்புவிளை,மடிச்சல் | 50000/- | 6200/- |
| 2 | ற்றி. பிரபின்ராஜ்,<br>ஈத்தவிளை, மடிச்சல் | 50000/- | 5700/- |

III. குழித்துறை வணிகவளாகம் கடை எண். 5

| | | | |
|---|---|---|---|
| 1 | டொனால்டு,<br>தீபம் காட்டேஜ், குழித்துறை | 50000/- | 2900/- |
| 2 | காட்வின்ராஜ்,<br>ஏதேன்பேலஸ், முதப்பன்கோடு | 50000/- | 2300/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண். A5 2015-2016-ல் மாத வாடகையாக ரூ.18,000/-க்கு வாடகைக்கு நடத்தி வந்த நிலையில் மாத வாடகை செலுத்திட இயலாமல் சாவி ஒப்படைப்பு செய்யப்பட்டு வாடகை தொகையினை வைப்புத்தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2016-2017 முதல் தற்சமயம் 2022-2023 வரை பலமுறை ஏலம். ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் எவரும் வாடகைக்கு எடுக்க முன்வரவில்லை.

வரிசை எண்.2-ல் காணும் மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடை எண்.34 2021-2022-ல் மாத வாடகையாக ரூ.10,000/-க்கு நடத்தி வந்த நிலையில் வாடகை செலுத்தாத நிலையில் கடை சீல் வைக்கப்பட்டு வாடகை செலுத்திட கேட்டும் வாடகை செலுத்திட முன்வராததால் வைப்புத் தொகையினை வாடகை தொகையில் ஈடு செய்யப்பட்ட நிலையில் ஒராண்டாக பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.

வரிசை எண்.3-ல் காணும் குழித்துறை வணிகவளாக கடை எண்.5 2021-2022-ல் மாதவாடகையாக ரூ.7200/-க்கு வாடகைக்கு நடத்தி வந்த நிலையில் கடை நடத்த இயலாததால் கடை ஒப்படைக்கப்பட்டு வாடகை தொகை வைப்புத் தொகையில் ஈடு செய்யப்பட்டு தற்சமயம் பூட்டிய நிலையில் உள்ளது.

மேற்படி விவரப்படி உள்ள கடைகளின் உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண். 424 - I) அனுமதிக்கப்பட்டது.
II) அனுமதிக்கப்பட்டது.
III) மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள பாலவிளை சாலையினை சீர் செய்ய ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் 01-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மன்றம் தீர்மானம் எண்.379, நாள் 29-12-2022-ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 24-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு. அகஸ்டின் சுரேஷ் |
| 2 | திரு. ஜெயகுமார் |
| 3 | திரு. ஜாண்சன் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திரு. ஜெயகுமார் மற்றும் திரு. ஜாண்சன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் தகுதி பெற்றுள்ளதால் அவர்களுடைய விலைப்புள்ளியினை (Price Bid) 31-01-2023-ல் திறக்கப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஜெயகுமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 16.31% குறைவு |
| 2 | திரு. ஜாண்சன் | மதிப்பீட்டை விட 0.75% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜெயகுமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டை விட 16.31% குறைவாக உள்ளதால் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.3997/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 425 - மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள விளவங்கோடு சாலையினை சீரமைக்கும் பணிக்கு ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் 01-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மன்றம் தீர்மானம் எண்.372, நாள் 29-12-2022-ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 24-01-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு. அகஸ்டின் சுரேஷ் |
| 2 | திரு. ஜெயச்சந்திரன் |
| 3 | திரு. ஜாண்சன் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மூன்று ஒப்பந்ததாரர்களையும் அவர்களுடைய ஆவணங்களை சரிபார்க்கும்படி 03-02-2023 அன்று ஆவணங்களுடன் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகும்படி 24-01-2023 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டதினடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு. அகஸ்டின் சுரேஷ் மற்றும் திரு. ஜாண்சன் ஆகியவர்கள் அலுவலகத்தில் ஆஜராகவில்லை. ஒப்பந்ததாரர் திரு. ஜெயச்சந்திரன் மட்டுமே அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆவணங்கள் சரிபார்த்து சென்றார். மேலும் திரு. அகஸ்டின் சுரேஷ் மற்றும் திரு. ஜாண்சன் ஆகியவர்கள் ஆவணங்கள் அலுவலகத்தில் சரிபார்க்க வராத காரணத்தினால் அவர்களுடை ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து விட்டு திரு. ஜெயச்சந்திரன் என்பவரின் விலைப்புள்ளியினை (Price Bid) 17-02-2023-ல் திறக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.14% குறைவாக வழங்கியுள்ளார். எனவே ஒப்பந்ததாரர் திருp. ஜெயச்சந்திரனின் ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டை விட 0.14% குறைவாக உள்ளதால் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.872/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 426 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் முத்தாரணிவிளை சாலையில் இடது புறத்தில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்க ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட 07-09-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தாரர் திரு.எஸ். பாபு என்பவருக்கு தீர்மானம் எண்.262, நாள் 15-09-2022-ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்பணி இடத்தில் பணி துவங்க சென்றபோது பணி மேற்கொள்ள வேண்டிய இடத்தில் மின்கம்பங்களை மாற்றி அமைக்க இயலவில்லை. எனவே அந்த இடத்தில் பணி மேற்கொள்ள

இயலாததால் மேற்படி பணியில் இதே வார்டில் வினோத் மருத்துவமனை முதல் மதி கோழிக்கடை வரை உள்ள சாலையில் இதே ஒப்பந்ததாரரைக் கொண்டு மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.388, நாள் 09-02-2023-ன் மூலம் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை மாற்று இடத்தில் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.1249/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 427 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 8</u>

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் சாலை அபிவிருத்தி பணிகள் நடைபெற்றதில் ஒப்பந்ததாரர் MJD construction நகராட்சி மீது மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. WP.(MD) No.2166 of 2023 வழக்கு தொடர்ந்துள்ளதால் நகராட்சி சார்பில் மதுரை Spl.Govt. Pleader A.K. மாணிக்கம் ஆஜராகிய வழக்கு, வழக்கு கட்டணம் ரூ.9500/- செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.4882/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 428 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் அமைந்துள்ள பொது கழிப்பிடம் சீரமைக்கும் பணிக்கு திரு. கிருஷ்ணன் என்பவரால் மதுரை உயர்நீதி மன்றத்தில் WP.(MD) No.23813/22 வழக்கு தொடர்ந்துள்ளதால் நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ். ஷாஜிகுமார் என்பவர் ஆஜராகிய வகைக்கு தொகையினை ரூ.10,000/- செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.4099/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 429 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சியில் செய்யப்பட்ட பணிகளை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கீழ்கண்ட பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை அந்தந்த நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) தினத்தந்தி - ரூ.9840/-
2) தினகரன் - ரூ.9775/-
3) தமிழ்முரசு - ரூ.9744/-

வரப்பெற்ற பட்டியல் தொகையினை வருவாய் நிதியில் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண். /2022/இ1.

மன்றத்தீர்மான எண். 430 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் அமைந்துள்ள கல்லுக்கட்டி பகுதியில் புதியதாக பூங்கா அமைப்பதற்கென G.O.(MS) No.7 நாள் 20-01-2023-ன்படி ரூ13.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் G.O.I Share 7.00 இலட்சம், G.O.T.N.Share 4.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு 2.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அரசு நிதிபோக நகராட்சி பங்களிப்பு தொகையினை ரூ.2.00 இலட்சத்தை பொது நிதியில் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்ற முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3347/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 431 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பழைய ஸ்டேட் வங்கி அருகில் மழைநீர் வடிகாலின் மீது அமைக்கப்பட்டுள்ள இரும்பு கம்பியினால் ஆன Grill மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. இதனை மாற்றியமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சமாகும். பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை நகராட்சியின் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.16/2023/இ1.

மன்றத்தீர்மான எண். 432 - அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.